# ஆவிக்குரிய விருத்தசேதனம் என்ற வகையில் ஞானஸ்நானம்

> *"அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப் பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவ சரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள். ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடேகூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து"; (கொலோ. 2:11-13).*

ஞானஸ்நானத்தைப் பற்றிய ஒரு வசனப் பகுதியான கொலோ. *2:11-13*ஐப் பற்றி நாம் கலந்தாய்வு செய்யும் முன்பு, கொலோசெயருக்கு இந்த நிருபத்தை எழுதுவதற்கான பவுலின் நோக்கத்தை நாம் கவனிப்போம். இயேசுவின் மாபெரும் தன்மை என்பதே கொலோசெயர் நிருபத்தில் பவுலின் பிரதான வலியுறுத்தமாய் இருந்தது, அவர், மனிதருடைய ஆழமான தேவைகளுக்கு பதில் என்ற வகையில் இயேசுவைச் சித்தரித்து, இயேசுவில்தான் நாம் மீட்பையும் நமது பாங்களுக்கு மன்னிப்பையும் பெறுகின்றோம் என்று வலியுறுத்தினார் (கொலோ. *1:14*). இயேசுவின் மாபெரும் பண்புகளைப் பற்றிய நமது அறிவானது (கொலோ. *1:15-18*) அவர் மீது அளவில்லா நம்பிக்கையை நமக்கு அளிக்க வேண்டும்.

கிறிஸ்தவர்கள் இருளின் அதிகாரத்தினின்று விடுவிக்கப்பட்டு தேவனுடைய குமாரனின் இராஜ்யத்திற்குள்ளாக்கப்பட்டதாகப் பவுல் அறிவித்தார் (கொலோ. *1:13*). இது இந்நிருபம் எழுதப்பட்ட வேளையில் பின்வருவனவற்றை மறைமுகமாய் உணர்த்திற்று: *(1)* இயேசு ஏற்கனவே இராஜாவாய் இருந்தார், *(2)* அவருடைய இராஜ்யம் இருந்து வந்தது, *(3)* மன்னிப்பு கிடைக்கக் கூடியதாய் இருந்தது மற்றும் *(4)* மக்கள் அவரது இராஜ்யத்தினுள் பிரவேசித்துக் கொண்டிருந்தனர். இயேசு பவுலுக்கு(சவுலுக்கு)த் தோன்றிய பொழுது, "அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்

*களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக் கொள்ளும்படியாக அவர்கள் இருளை விட்டு ஒளியினிடத்திற்கும் சாத்தானுடைய அதிகாரத்தை விட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படியாக நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும் பொருட்டு'' (அப். 26:18) பவுலைப் புறஜாதியாரிடம் அனுப்புவதாக அவரிடத்தில் இயேசு கூறினார். இருளில் இருந்து ஒளிக்கு உட்படுத்தப்பட்டவர்கள் என்பவர்கள் தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு இயேசுவின் இராஜ்யத்தினுள் இருப்பவர்களே.*

*இயேசுவுக்குள் நாம் மீட்பையும், நமது பாவங்களுக்கு மன்னிப்பையும் பெறுகின்றோம் (கொலோ. 1:14). தேவனுடன் நமது முறிந்த உறவை இயேசுவின் இரத்தம் சரிப்படுத்த முடியும் (1:20-22).*

*மற்றும், இயேசு தேவனுடைய சாயலாயிருப்பதால் அவர் மகா பெரியவராய் இருக்கின்றார் (1:15); அவர் சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேருமானவர் (1:15); சகலத்தையும் சிருஷ்டித்தவர் (1:16); எல்லாவற்றிற்கும் முந்தினவர் (1:17); எல்லாவற்றையும் நிலைநிறுத்துகின்றவர் (1:18); சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர் (1:18); மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேரானவர் (1:18); மற்றும் எல்லாவற்றிலும் முதல்வரானவர் (1:18).*

*இயேசுவை நமது கர்த்தர் என்ற நிலையிலிருந்து நம்மை எவரொருவரும் விலக்கி நடத்திச் சென்று விடாதபடிக்குப் பவுல் இயேசுவைப் பற்றிய இந்த அடிப்படை உண்மைகளை முன் வைத்தார் (2:4, 8). அவருக்குள் பின்வருபவை உள்ளன: ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்கள் எல்லாம் (2:3), தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக (2:9), நம்மைப் பரிபூரணமுள்ளவர்களாக்கும் திறமை (2:10), மற்றும் இயேசுவைப் பற்றும் விருத்தசேதனமானது நாம் ஞானஸ்நானம் பெறும் போது நமது பாவங்களை நீக்குகின்றது (2:11-13). இந்த உண்மை நிலைகள் நமக்கு, மனிதரின் போதனைகளையும் நியாயப்பிரமாணத்தில் கட்டளையிடப் பட்டுள்ளவற்றைப் பின்பற்றுவதையும் நாம் மறுக்கக் காரணமாயுள்ள (இயேசுவின் மீது) தைரியமான நம்பிக்கையை நமக்குத் தரக் காரணமானவைகளாய் இருக்க வேண்டும் (2:8, 14-17).*

*நாம் இயேசுவைக் கொண்டிராதவர்களாய் இருந்தால், நாம் நம்பிக்கை யற்றவர்களாகவும், தேவனற்றவர்களாகவும் இருக்கின்றோம்; ஆனால் நாம் அவருக்குள் இருந்தால், நாம் அவருடைய இரத்தத்தினாலே அவருக்குச் சமீபமாகின்றோம். எபேசியர் 2:13 வசனத்தில், "முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்" என்று கூறப்படுகின்றது.*

*கிறிஸ்து நமக்குள் இருப்பதிலும் நாம் கிறிஸ்துவுக்குள் இருப்பதிலும் தான் நமது மகிமையின் நம்பிக்கை உள்ளது (கொலோ. 1:27). அவருக்குள் நாம் சரீர இச்சைகளின் ஆளுகையிலிருந்து விடுவிக்கப்படுகின்றோம், ஆவிக்குரிய வகையில் உயிர் பிழைக்க வைக்கப்படுகின்றோம், மற்றும் நமது அக்கிரமங்கள் யாவும் மன்னிக்கப்படுகின்றன (கொலோ. 2:11-13).*

*அதிகாரம் 2ல் பவுல் தொடர்ந்து, கொலோசேயில் இருந்த கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்கு விசுவாசமுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தினார். அவர்கள் அவருக்குரியவர்களாய் இருக்கின்றனர்,*

*ஏனெனில் அவரிடத்திலிருந்து அவர்கள் ஆவிக்குரிய விருத்தசேதனத்தைப் பெற்றுக் கொண்டனர் என்று அவர் கூறினார். இந்த ஆவிக்குரிய விருத்தசேதனம் என்பது என்ன?*

## ஞானஸ்நானம் என்பது விருத்தசேதனத்தைப் போன்றதாக உள்ளது

> *அல்லாமலும், நீங்கள் கிறிஸ்துவைப்பற்றும் விருத்தசேதனத்தினாலே மாம்சத்துக்குரிய பாவசரீரத்தைக் களைந்துவிட்டதினால், கையால் செய்யப்படாத விருத்தசேதனத்தை அவருக்குள் பெற்றீர்கள் (கொலோ. 2:11).*

*ஆபிரகாமும் அவருடைய சந்ததிகளும் உடன்படிக்கையின் முத்திரையாக விருத்தசேதனத்தைப் பெற்றுக் கொண்டால் தேவன் அவர்களின் தேவனாயிருப்பதாக ஆபிரகாமிடத்தில் அவர் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார் (ஆதி. 17:7-11). விருத்தசேதனம் செய்து கொள்ளாத எந்த ஆண்பிள்ளையும் அவருடைய (ஆபிரகாமுடைய) மக்களில் இருந்து அறுப்புண்டு போவதாயிருந்தது (ஆதி. 17:14).*

*விருத்தசேதனத்தை ஆவிக்குரிய கருத்தில் ஞானஸ்நானத்துடன் பவுல் ஒப்பிட்டார்: விருத்தசேதனத்தில் (ஆண்) குழந்தையின் நுனித்தோலானது (வெட்டி) அகற்றப்படுவது போல, கிறிஸ்தவரின் இருதயத்தில் இருந்து பாவ இச்சைகள் நீக்கப்பட வேண்டியவைகளாய் உள்ளன. ஞானஸ்நானத்தை விருத்தசேதனத்துடன் ஒப்பிடுவதன் மூலம், ஞானஸ்நானத்தில் ஆவிக்குரிய விருத்தசேதனம் நடைபெறுவதாகப் பவுல் போதித்தார். ஞானஸ்நானத்தில், ஒருவர் தனது மாம்ச இச்சைகளையும் பாவசெயல்களையும் களைந்து போடுவதன் மூலம் ஆவிக்குரிய வகையில் விருத்தசேதனம் பண்ணப் படுகின்றார் (கொலோ. 2:11).*

*"களைந்து போடுதல்" (கிரேக்கம்: apekdusis) என்ற சொற்றொடர் "வரவேற்பற்ற உடைகளின் தொகுப்பு ஒன்றை நீக்குதல் அல்லது களைதல் என்ற உருவகமாய் இருப்பினும் இது கடந்த கால வாழ்வில் இருந்து முழுவதுமாக துண்டிக்கப்படுதல் என்பதையே கருத்தாக அறிவிக்கின்றது."[1] இவ்விடத்தில் விவரிக்கப்படுகின்ற விருத்தசேதனம் "கையால் செய்யப் படாத ஒன்றாக உள்ளது, அதாவது இது முற்றிலும் தேவனுடைய செயலாக உள்ளது … ஞானஸ்நானத்தில் அனுபவிக்கப்படுவது தேவனுடைய செயலாக உள்ளது என்பதைப் பவுல் வலியுறுத்துகின்றார்."[2] (இதே போன்ற சொற்றொடர்கள் மாற். 14:58 மற்றும் 2 கொரி. 5:1 ஆகிய வசனங்களிலும் உள்ளன.)*

*"மாம்ச சரீரம்" என்பது "பாவ சரீரம்" (ரோமர் 6:6) மற்றும் "சாவுக்கேதுவான சரீரம்" (ரோமர் 7:24) என்றும் குறிப்பிடப்படலாம். இயேசு மாம்சத்தில் வந்தார் என்ற உண்மையினாலே ஆதாரப்படுத்தப்பட்டுள்ள வகையில் (யோவா. 1:14; ரோமர் 1:3) சரீரமும் மாம்சமும் பாவம் நிறைந்தவையல்ல - ஆனால் அவற்றின் மூலமாகப் பாவமானது தனது*

இச்சையை நமக்கு வெளிப்படுத்த வாய்ப்பைக் காண்கின்றது. "மாம்சம்" என்ற வார்த்தையின் மூலமாகப் பவுல், பாவம் நிறைந்த விஷயங்கள் நம்மைச் சோதிக்கப் பயன்படும் மனித இச்சைகளை அர்த்தப்படுத்தினார் (கலா. 5:24). ஞானஸ்நானத்தில் ஆவிக்குரிய வகையில் ஈடுபாடு கொள்பவரிடமிருந்து மாம்சத்திற்குரிய இந்த இச்சைகள் ஒரு கருத்தில் நீக்கப்படுகின்றன.

விருத்தசேதனம் (கொலோ. 2:11) மற்றும் ஞானஸ்நானம் (2:12) ஆகியவற்றிற்கிடையே உள்ள தொடர்பானது தெளிவானதாக உள்ளது. கிறிஸ்துவுக்குள் விருத்தசேதனம் என்பது ஞானஸ்நானத்தில் நிறைவேற்றப் படுகின்றது என்பதே பவுலின் சிந்தனையினுடைய வளர் நிலையாக உள்ளது.

முர்ரே ஹாரிஸ் அவர்கள், "உங்கள் ஞானஸ்நான வேளையில், தேவனுடைய வல்லமை நிறைந்த செயலின் மீதுள்ள உங்கள் விசுவாசத்தின் மூலம் நீங்கள் ஆவிக்குரிய வகையில் உயிர்ப்பிக்கப்படும் பொழுது இந்த இருதய விருத்தசேதனம் நடைபெறுகின்றது, இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பியதன் மூலம் தேவன் வல்லமையை செயல்விளக்கப்படுத்தினார்"[3] என்றார்.

## ஞானஸ்நானத்தின் அர்த்தம்

> ஞானஸ்நானத்திலே அவரோடேகூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் (கொலோ. 2:12).

கொலோசெயர் நிருபத்தில் "ஞானஸ்நானம்" என்று அர்த்தப்படுத்தப் படுவது பல வழிமுறைகளில் கண்ணோக்கப்பட்டுள்ளது:

(1) பவுல் ஆவிக்குரிய (தண்ணீரினால் அல்ல) ஞானஸ்நானத்தையே மறைமுகமாய் உணர்த்துவதாகச் சிலர் நினைத்துள்ளனர், ஆனால் விஷயம் இப்படியிருக்க முடியாது. ஞானஸ்நானத்தின் குறிப்புகளைப் பற்றி அல்பிரெக்ட் ஒப்க் அவர்கள், "சந்தர்ப்பப் பொருளானது வேறு வகையாய்ச் சுட்டிக்காட்டவில்லையென்றால், ஞானஸ்நானத்திற்கான புதிய ஏற்பாட்டுக் குறிப்புகள் தண்ணீர் ஞானஸ்நானமாகவே நினைக்கப்பட வேண்டும். ஞானஸ்நானம் என்றாலே 'தண்ணீரில் ஞானஸ்நானப் படுத்துதல்' என்றே அர்த்தமாகின்றது. ஆகையால் ஊடகம் ஒன்றைக் குறிப்பிடுதல் என்பது அவசியமற்றதாக உள்ளது" என்று க(வ)ணித்துள்ளார்.[4]

பாவ சரீரத்தைக் களைந்து போட்டு பாவத்தை மன்னித்தல் என்ற தேவனுடைய செயல்தான் நமது இரட்சிப்பில் ஆவிக்குரிய பாகமாய் உள்ளது. தேவனுடைய செயலின் மீதுள்ள விசுவாசத்தினால் ஞானஸ்நானம் பெறுதல் என்ற பதில்செயல் செய்வது என்பது நமது பாகமாக உள்ளது.

(2) நேரடியான/உண்மையான ஞானஸ்நானத்திற்குப் பதிலாகப் பவுல் ஒரு அடையாளத்தைக் குறிப்பிட்டார் என்று சிலர் கூறியுள்ளனர், ஆனால்

இதுவும் உண்மையாய் இருக்க முடியாது. வேதாகமத்தின் மற்ற வசனப் பகுதிகள் ஞானஸ்நானத்தை ஒரு அடையாளமாக மட்டும் கருதியிருந்தால், இப்படிப்பட்ட ஒரு முடிவானது முறைப்படியானதாய் இருக்கலாம்; இருப்பினும் ஞானஸ்நானம் என்பது தண்ணீரை ஈடுபடுத்துகின்ற உடல் ரீதியான செயல் என்பதாகப் பிற கூற்றுகள் சுட்டிக்காண்பிக்கின்றன (மத். 3:13-17; அப். 8:35-39).

(3) இன்னொரு சிந்தனை வரிசையின்படி, ஞானஸ்நானத்தை விளைவிக்கின்ற இரட்சிப்பின் விசுவாசத்தைத் தேவன் (மக்களின்) இருதயத்தில் வைக்கின்றார் என்று பவுல் போதித்தார் எனப்படுகின்றது. விளக்கவுரையாளர்களின் ஒரு குழுவினர், "இயேசுவை உயிர்ப்பித்தலில் தேவனுடைய வல்லமையான செயலின் மீதுள்ள விசுவாசம் இரட்சிக்கும் விசுவாசமாக உள்ளது (ரோமர் 4:24; 10:9). மற்றும் இது இயேசுவை உயிர்ப்பித்த அவருடைய அதே 'வல்லமையான செயலினால்' கொண்டு வரப்படுகின்றது (எபே. 1:19, 20)" என்று எழுதினார்கள்.[5]

இருப்பினும், இழந்து போகப்பட்டவர்களின் இருதயங்களில் தேவன் விசுவாசத்தை வைக்கிறார் என்ற உபதேசம் வேத வசனங்களில் இருந்து அல்ல, ஆனால் நாமகரணக் கூட்டத்தின் போதனைக் கோட்பாடுகளில் இருந்து வந்த கருத்தாக உள்ளது. தேவனுடைய வசனத்தைக் கேட்பதி னாலேயே விசுவாசம் வருகிறது என்றுதான் வேதாகமம் போதிக்கின்றது (யோவா. 17:20; 20:30, 31; அப். 17:11, 12; ரோமர் 10:17).

(4) ஞானஸ்நானம் பெறுபவரின் விசுவாசம் அவரது வாழ்வில் தேவன் செய்கின்ற எந்த செயலின் மீதும் இருப்பதற்குப் பதிலாக, இயேசுவின் உயிர்த்தெழுதலின்மீது (அந்த விசுவாசம்) வைக்கப்படுகிறது என்பது இன்னொரு கண்ணோட்டமாக உள்ளது. வெகு சில விளக்கவுரையாளர்கள் இந்த விளக்கத்தை வெளிப்படுத்துகின்றனர்.

(5) ஞானஸ்நானம் பெறுபவர் தேவனுடைய செயலின் மீது - மரித்தோரிலிருந்து இயேசுவை எழுப்பிய அதே செயலின் மீது - விசுவாசம் வைக்கின்றார், அவர் இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் பலன்களைத் தம் வாழ்வில் பயன்படுத்திக் கொள்ளவே இவ்வாறு விசுவாசம் வைக்கின்றார் என்று பவுல் குறிப்பிட்டார் என்பதே மிகவும் சரியான கண்ணோட்டமாக உள்ளது. இது சந்தர்ப்பப் பொருளுடன் சீர் பொருந்தியதாக மற்றும் மிகவும் நியாயமான விளக்கமாக உள்ளது.

ரால்ஃப் P. மார்ட்டின் அவர்கள் பின்வருமாறு கூறினார்:

> கிறிஸ்துவின் மீட்பு என்ற ஆவிக்குரிய விருத்தசேதனத்திற்குப் பதில் அளிக்கின்ற கிறிஸ்தவ ஞானஸ்நானத்திற்கு, அதைப் பெறுபவரின் பகுதியில் தனிப்பட்ட ஒப்புதலும் ஏற்றுக் கொள்ளுதலும் தேவைப்படுகின்றது. விசுவாசத்தின் இன்றியமையாமையானது சடங்கை நோக்கி இலக்குப் படுத்தப்படாமல், அச்"சடங்கில்" தேவனுடைய செயல்களை நோக்கி இலக்குப் படுத்தப்படுகின்றது என்றே இது அர்த்தப்படுகின்றது, மற்றும் இது, விசுவாசிகள் மரித்து, உயிர்ப்பிக்கப் பட்டு தங்களைப் பாவத்தை வெற்றி கொண்ட தெய்வீக வாழ்வின் வட்டாரத்திற்குள் வைப்பது என்ற செயலைச் செய்ய வல்லமையுள்ள

*கிறிஸ்துவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் இரட்சிக்கும் வல்லமைக்குப் பயன்படுகின்றது (ரோமர் 6:7, 9-11).*[6]

ஹெர்பெர்ட் M. கர்ஸன் அவர்கள் பின்வருமாறு மிகச் சரியாகக் விளக்கியுள்ளார்.

> *இவ்விதமாக, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் ஏற்கனவே செயல் விளக்கப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய வல்லமையான செயலானது விசுவாசியின் தைரியமான நம்பிக்கைக்குக் கருப் பொருளாய் உள்ளது. எனவே விவாதம் பின்வருமாறு இருக்கும்: அவர்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலினுடைய உண்மையை ஏற்றுக் கொண்டார்கள். இது தேவனுடைய வல்லமைக்கு அடையாளமான செயல் விளக்கமாக இருந்தது, மற்றும் அவர்கள் அந்த வல்லமையைச் சார்ந்திருந்ததால் கிறிஸ்துவுடன் ஐக்கியத்தில் ஆவிக்குரிய உயிர்த்தெழுதலை அறிந்திருந்தனர்.*[7]

G. R. பீஸ்லே - முர்ரே அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> *விசுவாசத்தின் செயல்பாட்டை, மனிதரின் எண்ணப்போக்கு எதையும் பொருட்படுத்தாமல் செயல்படத் தேவன் கேட்கும் ஞானஸ்நானம் மட்டுமே என்றோ அல்லது தேவன் ஞானஸ்நானத்தில் என்ன செய்கின்றார் என்பதைப் புரிந்து கொள்ளுதல் மட்டுமே என்றோ அல்லது ஞானஸ்நானத்திற்குப் பிறகு ஏற்புடைய பதில்செயலை ஏற்படுத்துவதற்கான விருப்பத்தை மெய்ப்பித்தல் என்றோ குறிப்பிடுதல் தவறானதாக உள்ளது.*[8]

ஞானஸ்நானம் பெறுகின்றவர் செயல்படும் விசுவாசம் கொண்டிருக்க வேண்டியதன் அவசியத்தை பீஸ்லே - முர்ரே அவர்கள் கண்டார். இவ்விடத்தில் குறிப்பிடப்படுகின்ற விசுவாசம் என்பது இயேசு உயிர்ப்பிக்கப்பட்டார் என்ற உண்மையின் மீதுள்ளது மட்டுமின்றி, ஒரு நபர் ஞானஸ்நானம் பெறுகையில் நடைபெறும் தேவனுடைய செயலின் மீதுள்ள விசுவாச மாகும். மேலும் அவர் பின்வருமாறும் கூறினார்:

> *... விசுவாசியை மரித்தோரிலிருந்து எழுப்பும் வல்லமையை விசுவாசம் தன்னிலேயே கொண்டிருப்பது இல்லை - தேவன் அதைச் செய்யும் படியே, அது (விசுவாசம்) கண்ணோக்க முடியும்; ஆனால் இந்த எடுத்துரைப்பின்படி, ஞானஸ்நானம் பெறுபவரின் விசுவாசத்திற்குப் பதில்செயலாக ஞானஸ்நானத்தில் மரித்தவரைத் தேவன் தமது மகா வல்லமையினால் உயிர்ப்பிக்கச் செயல்படுகின்றார். தேவன் தமது செயலின் கருப் பொருள் மீது விசுவாசமற்ற வகையில் செயல்பாட்டின் காரணத்தினால் மட்டும் ஒருவரை உயிர்ப்பிக்கும் ஞானஸ்நானம் என்பது எண்ணவும் முடியாததாக உள்ளது.*[9]

*பரிசுத்த வசனங்களின் விளக்கவுரை: கொலோசெயர்* என்ற நூலில், கார்ல் பிரான் அவர்கள் பின்வருமாறு எடுத்துரைத்தார்:

> *எனவே தேவன் பண்பு படுத்தப்படுகின்றார்: ஒரு நபரை மரித்தோரில் இருந்து உயிர்ப்பிக்கின்றார், ஏனென்றால் முக்கூற்று முடிவு பின்வருமாறு செல்லுகின்றது: தேவன் கிறிஸ்துவை உயிர்ப்பித் துள்ளாரா, பிறகு அவர் என்னையும் புதிய வாழ்வினுள் கொண்டு வர முடியுமா (எபே. 1:19, 20ஐ ஒப்பிடவும்)? இது அனுபவிக்கப்படும் அளவில் ''தேவனுடைய செயல்பாடு'' என்றுள்ளது போன்ற விசுவாசமாகவே இந்நிகழ்வு முழுவதிலும் உள்ளது.[10]*

*வில்லியம் பார்க்ளே அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> *கிறிஸ்துவை மரித்தோரில் இருந்து எழுப்பிய தேவனுடைய வல்லமை யாகிய செயல்படும் கிரியை மீது ஒரு மனிதர் விசுவாசம் கொள்ளும் பொழுதுதான் இது நடைபெற முடியும். அப்பொழுதுதான் சிலுவை யினூடாகவும், உயிர்ப்பிப்பதாகவும் இயேசு கிறிஸ்துவை வழி நடத்திய வல்லமையானது அதே செயலைத் தனக்கும் செய்யும் என்று அவர் நம்பிக்கை கொண்டு இணங்க முடியும்.[11]*

*மார்வின் R. வின்சென்ட் அவர்கள், இப்படிப்பட்ட மாற்றமானது "தேவனுடைய செயலின் மீதுள்ள விசுவாசத்தினாலேயே" நடைபெறு கிறதேயன்றி, "தேவன் செயல்படுகின்றார் என்பதால் அல்ல ஆனால் தேவனு டைய செயலின் மீதுள்ள உங்கள் விசுவாசத்தினால் ... இது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் காட்சிப்படுத்தப்பட்டது போல இருக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.[12]*

*இராபர்ட் G. பிராட்சர் மற்றும் யூஜின் A. நிடா ஆகியோரால் நல்லதொரு தொகுப்புரை அளிக்கப்பட்டது:*

> *[கொலோ. 2:12ன்] மையப் பகுதியானது, "நீங்கள் ஞானஸ்நானம் பெற்ற பொழுது, தேவன் தமது வல்லமையினால் உங்களை மீண்டும் வாழும்படியும் செய்தார். அவர் உங்களைக் கிறிஸ்துவுடனே கூடவே உயிர்த்தெழவும் செய்தார். இது தேவனுடைய வல்லமையின் மீது உங்களுக்குள்ள விசுவாசத்தின் விளைவாக நடைபெற்றது" என்று தரவழைக்கப்படலாம்.[13]*

*இயேசுவின் மரித்த உடலுக்கு உயிர் கொடுத்த தேவனுடைய அதே வல்லமையானது பாவத்தில் மரித்துள்ளவரை எடுத்து ஆவிக்குரிய வாழ்வை அவருக்குக் கொடுக்க முடியும் என்ற விசுவாசம் கொண்டுள்ளவரே ஞானஸ்நானத்தில் பயனடையும் நபராக இருக்கின்றார். இது பிரசங்கியார் மீதோ, தண்ணீரின் மீதோ, (ஞானஸ்நானம் என்ற அந்த) செயல்பாட்டின் மீதோ, அல்லது இயேசுவின் உயிர்த்தெழுதலின் மீதோ கூட வைக்கின்ற விசுவாசம் அல்ல - ஆனால் இது, இயேசுவை எழுப்பியதால் (உடலுக்குரிய அல்லது ஆவிக்குரிய) வாழ்வளிக்கும் வல்லமையை செயல்விளக்கப்படுத்திய தேவனுடைய செயலின் மீது வைக்கின்ற விசுவாசமாக உள்ளது. இயேசுவின் இறந்த உடலில் புதிய ஜீவனைத் தேவன் வைத்தார் என்று ஒருவர் விசுவாசம் கொள்ள முடியுமென்றால், நிச்சயமாகவே அந்த நபர் தாம் ஞானஸ்நானம்*

பெறும்பொழுது, தேவன் ஆவிக்குரிய ஜீவனையும் மன்னிப்பையும் தமக்குத் தர முடியும் என்ற விசுவாசத்தின் திடமான அடிப்படையைப் பெற்றிருக்க முடியும்.

ஞானஸ்நானத்தின் செயலினுடைய செல்லுந்தன்மை தேவன் செய்கின்றவற்றின் மேலுள்ள விசுவாசத்தைச் சார்ந்துள்ளது. இப்படிப்பட்ட விசுவாசம் இல்லையேல், அந்த செயல்பாடு வெறுமையான, மதிப்பற்ற ஒரு சடங்காகவே உள்ளது. விசுவாசமும் புரிந்து கொள்ளுதலும் இல்லாமல் - ஞானஸ்நானம் தன்னிலே தானே - ஆவிக்குரிய விருத்தசேதனம் செய்வதோ அல்லது ஒருவரை இயேசுவுடன் உயிர் பெறச் செய்வதோ இல்லை. தேவனுடைய செயலின் மீது விசுவாசம் கொள்வதற்கு, நாம் ஞானஸ்நானம் பெறும் பொழுது தேவன் என்ன செய்கின்றார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். தேவன் நமது பாவங்களையும் பாவம் நிறைந்த இச்சைகளையும் களைந்து போட்டு, அவரால் செய்ய முடிந்ததும் மற்றும் செய்வதுமான வற்றின் மீது நாம் கொண்டுள்ள விசுவாசத்தினிமித்தம் நம்மை ஆவிக்குரிய வகையில் உயிர் பெறச் செய்கின்றார். இது நாம் இயேசுவின் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலில் அவருடன் இணையும் பொழுது மட்டுமே நடக்க முடியும். நாம் இதை - உடல் ரீதியாகவும் ஆவிக்குரிய வகையிலும் - ஞானஸ்நானத்தில் செய்கின்றோம்.

நாம் பின்வருமாறு முடிவு செய்ய வேண்டும்: (1) நாம் ஞானஸ்நானம் பெறுகையில் தேவனுடைய செயலை, ஜீவனையும் மன்னிப்பையும் கொடுப்பதற்கான தேவனுடைய செயல்படுதலாகப் பவுல் கண்ணோக்கினார், மற்றும் (2) இப்படிப்பட்ட செயல்விளைவுகளைக் கொண்டு வருவதற்கான உள்ளான திறனை ஞானஸ்நானம் கொண்டிருப்பது இல்லை. ஞானஸ்நானம் என்பது தேவன் செயல்படுகின்ற தருணமாக உள்ளது, ஏனென்றால் நாம் ஞானஸ்நானத்தில் இயேசுவுடன் அடக்கம் பண்ணப் பட்டு உயிர்ப்பிக்கப்படும் பொழுது, நமக்கு ஒரு புதிய ஆவிக்குரிய வாழ்வைத் தரவும் நமது பாவங்களை மன்னிக்கவும் நம்மை உயிர்ப் பிக்கும்படி கூட தேவன் செயல்பட முடியும் என்று நாம் விசுவாசிப் பதற்கான போதுமான ஆதாரத்தை நாம் இயேசுவின் உயிர்த்தெழுதலில் கண்டறிகின்றோம்.

## உயிர்ப்பிக்கப்பட்டு மன்னிக்கப்படுதல்

> *உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதன மில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடேகூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து; (கொலோ. 2:13).*

ஞானஸ்நானம் பெறுகையில் தேவனுடைய வல்லமையானது தங்களுக்கு என்ன செய்ய முடியும் என்பதை விசுவாசிப்பவர்கள் உயிர்ப்பிக்கப்படுகின்றனர். இப்படிப்பட்ட ஒரு மாற்றம் நடக்கின்றது என்பதைக் காண்பிக்கப் பவுல் இரு உருவகங்களைப் பயன்படுத்தினார்

*(கொலோ. 2:11-13).*

கொலோசெயிலிருந்தவர்கள் ஞானஸ்நானம் பெறும் முன்பு "விருத்த சேதனமில்லாதவர்களாக," மாம்ச இச்சைகளினால் கட்டுப் படுத்தப்பட்ட வர்களாக இருந்தனர் என்று பவுல் கூறினார். மேலும் அவர்கள் "பாவத்தில் மரித்தவர்களாய்" - அதாவது ஆவிக்குரிய நிலையில் மரித்து, இன்னும் பாவத்தினால் அசுத்தமாக்கப்பட்டவர்களாக - இருந்ததாகவும் அவர் விவரித்தார். ஞானஸ்நானத்தில் ஒரு மாற்றம் நடைபெற்றது: அவர்கள் தங்கள் ஆவிக்குரிய இச்சைகளைக் களைந்து போட்டதினால் ஆவிக்குரிய விருத்தசேதனம் பெற்றார்கள், மற்றும் ஆவிக்குரிய கருத்தில் இயேசுவின் உயிர்த்தெழுதலில் பங்கு பெற்றார்கள். தேவன் செய்ய முடிந்தவற்றில் அவர்கள் கொண்டிருந்த விசுவாசத்தின் காரணமாக அவர்கள் பாவத்தில் மரித்திருப்பதை விட்டு, உயிருள்ளவர்களாக்கப்பட்டனர். அவர்களின் முந்திய நிலைக்கு காரணமாயிருந்த பாவமானது ஞானஸ்நானத்தில் நீக்கப்பட்டு அவர்களை ஆவிக்குரிய விருத்தசேதனமும் ஆவிக்குரிய வாழ்வும் பெற்றவர்களாக்கிற்று. கொலோசெயிலிருந்தவர்களைப் பற்றிப் பவுல், "உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதன மில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடே கூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து"; என்று எடுத்துரைத்தார் *(கொலோ. 2:13).*

பவுலின் செய்திக்கான ஏற்புடைய வகையில் அமைந்த பின்வரும் தொகுப்புரையை A.T. இராபர்ட்சன் அவர்கள் கொடுத்தார்: "தேவன் ஜீவனைக் கொடுத்தார், மற்றும் அவர் ஆத்துமாவின் மீதும் சரீரத்தின் மீதும் ஜீவனைப் பொழிய முடியும். சந்தேகப்படுகின்றவர்களுக்குப் பவுல் தேவ வல்லமையை அளிக்கின்றார்."[14]

பிற்பாடு பவுல், ஞானஸ்நானத்தில் இயேசுவுடன் அடக்கம் பண்ணப் பட்டு உயிர்ப்பிக்கப்பட்ட அனுபவத்தைத் தொடர்ந்து வர வேண்டியது என்ன என்று போதித்தார். "நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டா னால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவை களையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது" *(கொலோ. 3:1-3).*

## தொகுப்புரை

ஞானஸ்நானமற்ற விசுவாசம் முழுமையற்றதாக உள்ளது, மற்றும் தேவனுடைய செயலின் மீது விசுவாசம் அற்ற ஞானஸ்நானம் செல்லாததாக உள்ளது. இரட்சிப்பு என்பது இயேசுவின் அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றில் ஞானஸ்நானத்தின் மூலம் நாம் பங்கு பெற விழையும் பொழுது தேவன் நமக்குச் செய்யக் கூடியது என்ன என்பவற்றின் மேலுள்ள விசுவாசத்தைச் சார்ந்துள்ளது. இது, தேவனுடைய வல்லமையானது இயேசுவை மரித்தோரிலிருந்து உயிர்ப்பித்தது என்றால், அதே வல்லமையானது நமக்கும் ஒரு புதிய ஜீவனைத் தரும் என்று கூறுகின்ற

விசுவாசமாக உள்ளது. நாம் இயேசுவுடன் இந்த நிலைமாற்றத்தை அனுபவித்திருந்தால், நமது வாழ்வின் நோக்கை நாம் பூமிக்குரிய இலக்குகளிலிருந்து பரலோகத்திற்குரிய இலக்குகளுக்கு மாற்றிக் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றோம்.

---

குறிப்புகள்

[1]Ralph P. Martin, *Colossians and Philemon,* The New Century Bible Commentary, gen. ed. Matthew Black (England: Marshall, Morgan & Scott, 1973; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 81. [2]Ibid., 82. [3]Murray J. Harris, *Colossians and Philemon* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1991), 112. [4]Albrecht Oepke, *"baptizo," Theological Dictionary of the New Testament,* vol. 1, ed. Gerhard Kittel, trans. Geoffrey W. Bromiley, (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 539. [5]Robert Jamieson, A. R. Fausset, and David Brown, *Commentary on the Whole Bible* (Grand Rapids, Mich.: Zondervan, 1961), 1321. [6]Ralph P. Martin, *Colossians: The Church's Lord and the Christian's Liberty* (Exerter: The Paternoster Press, 1972), 87. [7]Herbert M. Carson, *Stand Perfect in Wisdom* (Grand Rapids, Mich.: Baker, 1981), 110. [8]G. R. Beasley-Murray, *Baptism in the New Testament* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 273. [9]Ibid., 364. [10]Karl Braune, *Commentary on the Holy Scriptures: Colossians,* vol. 3, new ed., ed. Peter Lange, trans. M. B. Riddle (Grand Rapids. Mich.: Zondervan, 1969), 46.

[11]William Barclay, *The Letters to the Philippians, Colossians and Thessalonians,* rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1959), 168. [12]Marvin R. Vincent, *Word Studies in the New Testament,* vol. 3 (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1946), 489. [13]Robert G. Bratcher and Eugene A. Nida, *A Translator's Handbook of Paul's Letters to the Colossians and to Philemon* (New York: United Bible Societies, 1977), 58. [14]A. T. Robertson, *Paul and the Intellectuals: The Epistle to the Colossians,* rev. and ed. W. C. Strickland (New York: Doubleday, Doran and Co., 1928; reprint, Nashville: Broadman Press, 1959), 84.